# <u>தீபாவளி</u>

## முன்னுரை :-

மக்கள் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி கொண்டாடும் பண்டிகை தீபாவளி. தீபாவளி திருநாள் அன்று, சிறியவர் முதல் பெரியவர் வரை மிகவும் மகிழ்ச்சியுடன் பட்டாசு வெடித்து கொண்டாடுவர். தீபாவளி பண்டிகையின் சிறப்பினையும், இத்திருநாள் கொண்டாடும் முறையினையும், இக்கட்டுரையில் காண்போம்.




## தீபாவளி :-

தீப + ஆவளி = தீபாவளி. தீபம் என்றால், ஒளிவிளக்கு என்று பொருள். ஆவளி என்றால், வரிசை என்று பொருள். தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து, கொண்டாடும் விழா தீபாவளி. இருள் நீக்கி ஒளி தரும் தீபம் போல், மனதில் உள்ள இருளை போக்கும் திருநாளே தீபாவளி. கிருஷ்ண பகவான், நரகாசுரன் என்ற கொடிய அரக்கனை கொன்ற போது, அவன் தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்ற

விருப்பத்திற்கிணங்க, அந்தநாள் தீபாவளி திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. தீபாவளி திருநாள் அன்று, ஒவ்வொருவர் மனதிலும் புதைந்து இருக்கும் கோபம், பொறாமை, தலைக்கணம் போன்ற தீயக்குணங்களை ஒழித்து விட வேண்டும். வாழ்வில் இருள் நீக்கி ஒளி தரும் பண்டிகையே தீபாவளி.

## கங்கா குளியல் :-

தீபாவளி அன்று, அதிகாலையில் எண்ணெய் தேய்த்து குளிக்கும் எண்ணெய் குளியலை கங்கா குளியல் என்று அழைப்பர். கிருஷ்ணர், நரகாசுரன் என்ற அரக்கனை அழித்த நேரம் அதிகாலை என்பதால், தீபாவளி திருநாள் அன்று, அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து குளிக்கிறோம். தீபாவளி திருநாள் அன்று, எண்ணெய் தேய்த்து குளிப்பது, புனிதநீரான கங்கை நதியில் நீராடுவதற்கு நிகராகும்.

## தீபாவளி கொண்டாடும் முறை:-

தீபாவளி அன்று மக்கள் அனைவரும் அதிகாலையில் எழுந்து, எண்ணெய் தேய்த்து குளிப்பர். பின்னர் காலை உணவு உண்பர். தீபாவளி அன்று, புத்தாடை உடுத்தி, வீட்டில் உள்ள பெரியோரிடம் ஆசிர்வாதம் பெறுவர். பூஜைகள் செய்து, தீபம் ஏற்றி இறைவனை வணங்குவர். இல்லங்களில் பலகாரம் செய்வர். தீபாவளி பலகாரங்களை, உறவினர்க்கும், அருகாமையில் வசிப்பவர்க்கும் கொடுத்து மகிழ்வர். மாலையில் இல்லங்களுக்கு வெளியே தீபம் ஏற்றி, பின்னர் பட்டாசு வெடித்து மகிழ்வுடன் தீபாவளியை கொண்டாடுவர். தீபாவளி திருநாள் இன்பம் பொங்கும் சிறந்த நன்னாள் ஆகும்.

**தீபாவளி கவிதை** :-

தீபத்தால் ஒளி பிறக்கும்,
ஒளியால் இருள் விலகும்,
இருள் நீங்க வழி பிறக்கும்,
வழி பிறந்தால் வாழ்க்கை செழிக்கும்,
வாழ்க்கை செழித்தால் இன்பம் துளிரும்,
இன்பம் துளிர்ந்தால் மனதில் தூய்மை நிலவும்,
தூய்மை நிலவினால் தீபாவளி சிறக்கும்.

**தீபாவளி குதூகலம்** :-

தீபாவளி அன்று குழந்தைகள் உற்சாகத்துடன் பட்டாசு வெடித்து, புத்தாடை அணிந்து இனிப்பு உண்டு மகிழ்வார்கள். பின்னர் கோவிலுக்குச் சென்று, இறைவனை வணங்குவர். பெரியோர்கள், தீபாவளி அன்று வீட்டிற்கு வரும் உறவினர்களை உபசரிப்பதிலும், அவர்களுடன் உரையாடுவதிலும் மகிழ்ச்சி காண்கின்றனர்.

**முடிவுரை** :-

மனிதர்களிடையே பல வேற்றுமை காணப்பட்டாலும், ஒற்றுமையுடன் கொண்டாடும் பண்டிகையே தீபாவளி. இனி வரும் ஒவ்வொரு தீபாவளியும் மகிழ்ச்சியுடனும், சிறப்புடனும் அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.